செய்தி வெளியீடு எண். 38-2016 நாள்: 19.09.2016

விழுப்புரம் மாவட்ட அரசினர்/ தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் கலந்தாய்வு மூலம் ஆகஸ்டு 2016 பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கு Online மூலம் விண்ணப்பிக்க 23.09.2016 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது. உளுந்தூர்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் திரு.சு.ஆறுமுகம் அவர்கள் தகவல்.

******

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையை சார்ந்த விழுப்புரம் மாவட்ட அரசினர்/ தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் கலந்தாய்வு மூலம் ஆகஸ்டு 2016 பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கு, விண்ணப்பங்கள் Online-ல் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்ய 23.09.2016 வரை கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது Online மூலம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு 24.09.2016 அன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டையில் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள காலியிடங்களுக்கு நேரடி சேர்க்கை நடைபெறவுள்ளதால், விண்ணப்பதாரர்கள் 24.09.2016 அன்று அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், உளுந்தூர்பேட்டைக்கு நேரடியாக வந்து மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இன ஒதுக்கீடு அடிப்படையில் காலியிடம் இருப்பின் பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.